பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை 03.11.2020 கதிர் 229

## மேலும் 39 பொலிஸாருக்கு கொரோனா வைரஸ் தொற்று

நாட்டில் மேலும் 39 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என கொவிட் -19 தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக கொவிட் - 19 தேசிய செயற்பாட்டு மையம் மேலும்

2

# கொரோனா உக்கிர தாண்டவம் பலியெடுப்பு 23 ஆக அதிகரிப்பு

## 12 நாள்களில் 10 பேர் உயிரிழப்பு

**இலங்கையில் கொரோனா வைரஸ் உக்கிர தாண்டவம் ஆடி வருகின்றது. ஒரு புறத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து வருகின்ற நிலையில், மறுபுறத்தில் சாவடைபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.**

**கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்களே சாவடைந்துள்ளனர்.**

2

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு! மீண்டும் 12ஆம் திகதி கூடும்!!

நாடாளுமன்றம் எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் மீண்டும் கூடவுள்ளது.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு கூடியது. இதன்போது மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஒருமணிவரைவிவாதம்நடைபெற்றது. அதன்பின்னர் நாடாளுமன்றம் எதிர்வரும் 12ஆம் திகதிவரை பிற்போடப்பட்டது.

## இந்த நாட்டில் நீதி இருந்தால் எனக்கு விடுதலை கிடைக்கும்

### விளக்கமறியல் கைதி ரிஷாத் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு



என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அப்பட்டமான பொய்களாகும். எனவே, இந்த நாட்டில் நீதி, நியாயம் இருந்தால் நிச்சயம் விடுதலை செய்யப்படுவேன்.

2

## நேற்று இராமேஸ்வரத்திலிருந்து தப்பி வந்தவர் கீரிமலையில் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.03

இந்தியாவின் இராமேஸ்வரம் ஈழத் தமிழர் அகதி முகாமில் இருந்த ஒருவர் தப்பி ஓடி வந்து கீரிமலையில் நின்ற சமயம் நேற்றைய தினம் இனம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து 50 ஆயிரம் ரூபா பணம் வழங்கி தலைமன்னார் கடற்கரையில் 2ஆம் திகதி அதிகாலை இவர் கரை இறங்கியுள்ளார். அங்கிருந்து அவர் மன்னார் நகரை அடைந்துள்ளார். மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் கீரிமலைக்குச் செல்வதற்கு பஸ்ஸில் பயணிக்கும் சமயம் அகப்பட நேரிடும் எனக் கருதி ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தியுள்ளார்.

2

## ஓமந்தை காட்டில் அரிய வகை அரணை இனம்





வவுனியா, ஓமந்தைக் காட்டுப் பகுதியில் இலங்கைக்கே உரித்தான அரிய வகை அரணை இனம் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தைக் காட்டுப் பகுதிக்கு கடந்த வாரம் சென்ற ஒருவர் **Dasia halianus** என்ற இலங்கைக்கே உரித்தான அரணை இனம் ஒன்றை மரத்தில் அவதானித்த நிலையில் அதனை புகைப்படம் எடுத்துள்ளார்.

2

## கொரோனா வைரஸுக்கு முடிவுகட்ட தேசிய பொறிமுறை மிக அவசியம்!

### சபையில் அநுரகுமார இடித்துரைப்பு



கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தேசிய பொறிமுறையொன்றை அரசு வகுக்க வேண்டும். அதற்கான ஆதரவு வழங்கப்படும்.

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

2

## அடி காயங்களுடன் சடலம் நிர்வாண நிலையில் மீட்பு

### திருமலை பாலையூற்றில் சம்பவம்

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பாலையூற்று பிரதேசத்தில் ரயில் விடுதியின் உள்ளே இன்று அடி காயங்களுடன் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைப்பெற்ற தகவலின் அடிப்படையில் விரைந்து சென்ற

2

## பாணந்துறை ஒதுங்கிய 5 திமிங்கிலங்கள் சாவு



பாணந்துறை கடற்பரப்பில் கரையொதுங்கிய திமிங்கிலங்களை காப்பாற்றுவதற்காக கடற் படையினர் உள்ளிட்ட பல தரப்பினர் நேற்று நடவடிக்கை எடுத்திருந்தனர்.

எனினும் இந்தத் திமிங்கிலங்களில் 5 திமிங்கலங்கள் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பாணந்துறை கடற்கரைக்கு நேற்றுப் பிற்பகல் 2 மணி அளவில் சுமார்

2

## பெரும்பான்மை வாக்குகளினால்

# பருத்தித்துறை பிரதேச சபை 'பட்ஜட்' இன்று நிறைவேற்றம்



ஈ.பி.டி.பி., சு.க. மட்டும் எதிர்ப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து மூன்றாவது வருடமாகவும் பெரும்பான்மை வாக்குகளால் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறியுள்ளது.

2

## அடி காயங்களுடன் சடலம் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையகப் பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் திருகோண மலை மகமாயப்புரத்தைச் சேர்ந்த (வயது 68) அபயசூரிய பட்டமெனிகே விஜயபால என இறந்தவரின் மனைவிக்கு அடையாளம் காட்டினார்.

மீன் வியாபாரியான இந்த நபர் காலை மீன் வியாபாரம் முடித்து மாலை பணம் வசூலிக்க சென்றார் என அவரின் மனைவி பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்தார்.

சடலம் நிர்வாணமான நிலையிலேயே மீட்கப்பட்டமையுடன் குறித்த மரணம் உடல் உறவுக்கு பின் நிகழ்ந்துள்ளதாக தலைமையகப் பொலிஸ சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பாணந்துறை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
50 முதல் 60 திமிங்கலங்கள் கரை ஒதுங்கிய நிலையில் அந்தத் திமிங்கிலங்களை மீண்டும் கடலுக்கு அனுப்பும் நடவடிக்கையில் பிரதேசவாசிகள் ஈடுபட்டிருந்தனர்.

கடற்படையினர், பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இன்று அதிகாலை இந்தத் திமிங்கலங்கள் கடலுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும், பாணந்துறை, நல்லூருவ மற்றும் வாத்துவை கடற்பரப்பில் கரையொதுங்கிய மூன்று திமிங்கிலங்கள் உயிரிழந்துள்ளன.

கடந்த மாதத்தில் அவுஸ்திரேலியாவின் டாஸ்மேனியா கடற்கரையில் இவ்வாறு பாரியளவிலான திமிங்கலங்கள் கரை ஒதுங்கி இருந்த நிலையில் அவற்றில் 400 உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை பிரதேச ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கு ஆதரவாக 16 பேரும், எதிராக 4 பேரும் வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 8 பேரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 4 பேரும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 2 பேரும், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆகிய கட்சிகளின் தலா ஓர் உறுப்பினருமாக 16 பேர் ஆதரவாக வாக்களித்தனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலா இரண்டு உறுப்பினர்களுமாக 4 பேர் எதிராக வாக்களித்தனர். ஈ.பி.டி.பியின் உறுப்பினர் ஒருவர் சமுகமளிக்கவில்லை.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் தலைமையில் இன்று காலை 9 மணியளவில் ஆரம்பமானது.

தவிசாளர் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து சபையின் அங்கீகாரத்தைக் கோரினார். அதற்கமைய அங்கீகாரத்தைப் பெற வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அ.சா.அரியகுமார் (தவிசாளர்), கு.தினேஷ் (உப தவிசாளர்), க.தவயோகநாதன், த.சந்திரதாஸ், க.ஸ்ரீகாந்தரூபன், தி.தியாகலிங்கம், ஆ.சுரேஷ்குமார், சி.பிரசாத் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச்சேர்ந்த கி.ஜெயபாலன், ஞா.தர்ஷன், திருமதி ரஜிதா விஜயழகன், திருமதி சி.கவிதா ஆகியோரும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த வே.பிரசாந்தன், எட்வேட் எட்வின் ஆகியோரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இ.நாகேந்திரராஜாவும், ஸ்ரீலங்கா பொதுஜனமுன்னணியைச்சேர்ந்த பொன்னுச்சாமி பிரேமதாஸும் ஆதரவாக வாக்களித்தனர்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கா.அரசரட்ணம், ஞா.பாலரமேஷ் ஆகியோரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் (ஈ.பி.டி.பி.) சேர்ந்த செல்வி சாந்தாதேவி தர்மரட்ணம், திருமதி கலாவதி பரமேஷ்வரன் ஆகியோரும் எதிராக வாக்களித்தனர்.

ஈ.பி.டி.பியின் மற்றைய உறுப்பினரான செ.செபஸ்தியான் இன்றைய சபை அமர்வுக்குச் சமுகமளிக்கவில்லை.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 16 வாக்குகளும், எதிராக 4 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில், 12 வாக்குகள் வித்தியாசத்தில் - பெரும்பான்மைப் பலத்துடன் அது வெற்றி பெற்று சபையில் நிறைவேற்றப்பட்டது.

## கொரோனா .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டமைப்பு ஸ்தம்பிதமடைந்தால் பாரிய நெருக்கடி நிலைமை உருவாகும். எனவே, இதனை தேசிய பேரிடராகக்கருதி, தேசியபொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும். - என்றார்.

## ஓமந்தை காட்டில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கைக்கு மட்டுமே உரித்தான தாசியா ஹாலியானஸ் **Dasia halianus** எனும் உயிரியல் பெயருள்ள இந்த தனித்துவ அரணை இனம் வன்னிக் காடுகளில் இருந்து வந்துள்ள போதும், மிக அரிய வகை உயிரினமாகவே உள்ளது. பெரும்பாலும் மரங்களில் இவ் உயிரினம் வாழ்ந்து வருகின்றது.

நாட்டின் ஒரு அரியவகை உயிரினமாக இது இருப்பதனால் 1970 ஆம் ஆண்டுகளில்வெளிவந்தஇலங்கையின் இரண்டு ரூபாய் நாணயத்தாளில் இதன் படம்காணப்படுவதைஅவதானிக்கலாம். தற்போது இந்த அரிய வகை அரணை இனத்தின் புகைப்படம் சமூக வலைத்தலத்தில் வைரலாக பரவி வருகிறது.

## இந்த நாட்டில் நீதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் எந்தவொரு குற்றத்தையும் செய்யவில்லை. மக்களுக்கு வாக்களிக்க வாய்ப்புப் கொடுத்தமையால் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். எனவே, இறைவன் நீதியை பெற்றுக்கொடுப்பார்.

கொரோனா வைரஸ் தொற்றால் முஸ்லிம்கள் உயிரிழக்கும்பட்சத்தில் அவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி தாருங்கள். நான் இறந்தால்கூட என்னையும் எரிப்பார்கள். எனவே, அரசு முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். - என்றார்.

## நேற்று இராமேஸ் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'வாடகைக்கு அமர்த்திய ஓட்டோவுக்கு 8 ஆயிரம் ரூபா பணம் வழங்கி கீரிமலையில் உள்ள சகோதரியின் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தற்போது சகோதரியின் குடும்பமும் இந்தியாவில் இருந்து வருகை தந்த 28 வயது இளைஞரான ஜெகநாதன் ஜெனன் ஆகியோரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## கொரோனா உக்கிர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொழும்பு, கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண்ணும், கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 81 வயதுடைய பெண்ணுமே பலியாகியுள்ளனர்.

இதற்கு முன்னர், 22 ஆவது கொரோனா உயிரிழப்பு பாணந்துறை வைத்தியசாலையில் பதிவாகியுள்ளது என நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், குறித்த உயிரிழப்பு தற்கொலையால் ஏற்பட்டது என்பதால், பின்னர் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கைப் பட்டியலில் இருந்து அதனை சுகாதார அமைச்சு நீக்கியிருந்தது. இதற்கமைய நேற்று வரையில் 21 உயிரிழப்புகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி கடந்த 12 நாட்களில் மாத்திரம் 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு!

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர், ஆனைகட்டியவெளி பிரதேசத்தில் தனியார் ஒருவரின் காணியில் இருந்து ஒருதொகுதி ஆயுத உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் ஒருவர் தனது மேட்டு நில காணியைப் பயிர்ச் செய்கைக்காகப் பண்படுத்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது பொலித்தீன் பையால் பொதி செய்யப்பட்ட பொதியொன்று காணப்பட்டதையடுத்து, கிராம சேவை உத்தியோகத்தரின் ஊடாகப் பொலிஸாருக்குச் சம்பவம் பற்றி தெரியப்படுத்தினார்.

இதன் பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் குறித்த இடத்தில் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இணைந்து நடத்திய தேடுதலின்போது ரி - 56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் மகசின் - 15, தோட்டாக்கள் - 373, மகசின்கள் வைக்கப்படும் கிற் போன்ற பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மேலும் 39 .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கூறியுள்ளதாவது:-

இராஜகிரியவிலுள்ள தனிமைப்படுத்தல் முகாமிலிருந்த 23 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பொரளை பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட 8 பொலிஸ் அதிகாரிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று இராஜகிரிய பாதுகாப்பு பிரிவில் இணைக்கப்பட்ட 2பொலிஸ் உத்தியோகத்தர்கள், வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் 2பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கோட்டை, நீர்கொழும்பு பொலிஸ் நிலையங்கள், கொழும்பு நகர போக்குவரத்துபிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை ஆகியவற்றில் தலா ஒரு அதிகாரி கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். - எனக் குறிப்பிட்டுள்ளது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# அமெ அதிபர் தேர்தல் இன்று

உலக நாடுகளின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் வல்லரசு அமெரிக்கா. அந்த தேசத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் அதிபர் தேர்தல் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

குடியரசுக் கட்சி வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனும் இந்தத் தேர்தல் களத்தில் மோதுகின்றார்கள்.

ஏற்கனவே பெரும் எண்ணிக்கையானோர் தபால் மூலம் வாக்களித்துள்ள நிலையில் தேர்தல் முடிவுகள் நாளை இரவில் வரும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

அனேகமாகத் தேர்தல் சமயத்திலான அனைத்துக் கருத்துக் கணிப்புகளுமே தற்போதைய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பெரும் பின்னடைவு நிலையிலேயே இருக்கின்றார் எனத் தெரிவிக்கின்றன.

ஜோ பைடன் 52 வீத ஆதரவுடனுடம் டொனால்ட் ட்ரம்ப் 42 வீதி ஆதரவுடனும் தேர்தலை எதிர்கொள்கின்றனர் என்பதுதான் பல தரப்புகளினதும் கணிப்பீடாக உள்ளது. பொக்ஸ் நியூஸின் கருத்துக் கணிப்பு மாத்திரம் 52 வீதத்துக்கு 42 வீதம் என்பதற்குப் பதிலாக 52 வீதத்துக்கு 44 வீதம் என்ற கணக்கை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஜோ பைடன் 2009 முதல் 2017 வரை எட்டு ஆண்டுகள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உப ஜனாதிபதியாகச் செயற்பட்டு பெயரெடுத்தவர்.

அவர் வெற்றிபெறுவாராயின் இலங்கை – இந்தியத் தமிழர்களுக்கு ஒரு மகிழ்வு காத்திருக்கின்றது. ஜோ பைடனின் அணியில் உப ஜனாதிபதியாகக் களத்தில் நிற்பவர் தமிழகத்தைத் தமது பூர்வீகமாகக் கொண்ட கமலா ஹரிஸ் அம்மையார். தமிழகம் மன்னார்குடி பகுதியில் உள்ள துளசேந்திரபுரத்தின் வழித் தோன்றல் அவர்.

இன்று நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ஜோ பைடனும் அவரது உப ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹரிஸ் அம்மையாரும் வெற்றி பெற வேண்டி இன்று மன்னார்குடி துளசேந்திரபுரம் கிராமத்தில் சிறப்பு பூஜை நடைபெறுகின்றது.

கமலா ஹரிஸ் அம்மையாரின் தாய் வழி குல தெய்வமான தர்மசாஸ்தா கோயில் துளசேந்திரபுரத்தில் உள்ளது. இந்த கோயிலுக்குத் தமது உறவினர் மூலம் கமலா ஹரிஸ் நன்கொடை வழங்கி வருகின்றார். அந்தக் கோயிலிலேயே ஹரி ஸின் வெற்றிக்காக இன்று விசேட பலாபிஷேக பூஜையை அவரது கிராம மக்கள் நடத்துகின்றனர்.

கமலா ஹரிஸின் அத்தை சரளா கோபலான் 2014 இல் இந்தக் கோயில் கும்பாபிஷேகத்துக்குப் பெரும் நன்கொடை அளித்தார். கோயில் நன்கொடையாளர் பட்டியலில் கமலா ஹரிஸின் பெயரும் உள்ளது. சிறுவயதில் கமலா ஹரிஸ் இந்தக் கோயிலுக்கு அடிக்கடி வந்து சென்றிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்களில் இதற்கு முன்னர் இரண்டு முறை பெண்கள் உப ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிட்டுள்ளனர். 2008 ஆம் ஆண்டில் குடியரசுக் கட்சி சார்பில் சாரா பாலினும், 1984 ஆம் ஆண்டு ஜனநாயகக் கட்சி சார்பில் ஜெரால்டின் பெரேராவும் போட்டியிட்டுள்ளனர். ஆனால் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. இம்முறைத் தேர்தலில் வெற்றி பெற்றால் அமெரிக்காவின் முதல் பெண் உப ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் வர முடியும்.

அவருக்கான வெற்றி வாய்ப்பு மிகப் பிரகாசமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தேர்தலில் அவரது அணி வென்று அவர் அமெரிக்க நாட்டின் உப ஜனாதிபதியானால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் – 2024 இல் – நேரடியாக அமெரிக்க ஜனாதிபதிப் பதவிக்கு அவர் களமிறங்கக் கூடிய நிலைமை ஏற்படலாம் என்று இப்போதே ஹேஸ்யம் கூறப்படுகின்றது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்தத் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெறுவார் என்ற கருத்து ஆழமாக வேரூன்றியிருந்தது.

ஆனால் கொரோனா வைரஸின் வருகையும், அதனை ட்ரம்ப் நிர்வாகம் கையாண்ட உதாசீனப் போக்கும் யாவற்றையும் புரட்டிப் போட்டு விட்டது எனலாம்.

என்றும் இல்லாத அளவிற்கு இளைஞர்கள் – புது வாக்காளர்கள் – இந்தத் தேர்தலில் திரண்டு வாக்களித்து வருகின்றனர். இந்த நிலைமை ஜோ பைடனின் கரங்களைப் பலப்படுத்தும் என்றும், தற்போதைய அதிபர் டொனால்ட் ட்ரம்புக்குப் பெரும் பின்னடைவைத் தரும் என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் மக்கள் மூலம் ஒவ்வொரு மாநிலத்திலும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கபடுவர். இவர்களின் மொத்த எண்ணிக்கை 538. இந்தப் பிரதிநிதிகளே அமெரிக்க ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பர்.

அதிபராகத் தேர்தெடுக்கப்பட 270 பிரதிநிதிகளின் ஆதரவு தேவை. கடந்த முறை தேர்தலில் ட்ரம்பை விட ஹிலாரி கிளின்டனுக்கு 28 லட்சம் வாக்குகள் அதிகம் விழுந்தன. ஆனால் போதுமான பிரதிநிதிகள் கிட்டாமையினால் ஹிலாரி தோற்றார். ட்ரம்ப் வென்றார்.

இந்த முறை என்ன நடக்கப் போகின்றது? பெரும்பாலுமம் நாளை இரவு நிலைமை தெளிவாகிவிடும்.

# செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கடற்றொழில் அமைச்சருக்கு கடிதம்



மன்னார் நறுவிலிக்குளம் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்குமாறு கோரி தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் இன்று (செவ்வாய்க்கிழமை) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில் –

மன்னார் நறுவிலிக்குளம் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நறுவிலிக்குளம் அன்னை வேலாங்கண்ணி மீனவர் கூட்டுறவு சங்கம் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

அவர்கள் கடற்தொழிலை மேற்கொண்டு வரும் பகுதியில் போதிய இட வசதி இல்லாத காரணத்தால் அவர்கள் மீன் பிடி படகுகளை நிறுத்தி வைப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று அவர்களின் பிரச்சினைகளை அவதானித்தேன். மீனவர்களின் படகுகள் கப்பல்துறை செல்லும் கடற்கரை பகுதி, கடல் மற்றும் நீரோடையில் மணலாக காணப்படுகின்றது. நீரோடையில் நீர் வற்றினால் அவர்கள் சுமார் 200 மீற்றர் தூரம் தமது படகுகளை இழுத்துச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இதனால் சில மீனவர்கள் தமது படகுகளை கடலிலும், கடற்கரையிலும், அருகில் உள்ள புதர்களிலும் நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பல படகுகளுக்கு சேதமும் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது மீனவர்கள் தமது படகுகளை நிறுத்தும் இடம் போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இல்லாத நிலை காணப்படுகின்றது. மேலும் அந்த மீனவர் கள் கடல் அட்டை மற்றும் சங்க வியாபா ரத்தை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இந்த பகுதி மக்கள் அதிகமாக மீனவர்களாகவே உள்ளனர்.

அவர்களின் வாழ்வாதாராம் அன்றாட மீன் பிடி நடவடிக்கை மூலமே இடம்பெற்று வருகின்றது. எனவே இந்தப் பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் தேவையைப் பூர்த்திசெய்ய உடனடியாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். – என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 1,600கிலோ மஞ்சளுடன் 16 பேர் கைது





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.03

சிலாபம் பகுதியில் இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாக கருதப்படும் ஆயிரத்து 600 கிலோ மஞ்சளுடன் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து இரு படகுகளில் மஞ்சள் கடத்தி வரப்படுவதாக கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது மறைத்து வைத்திருந்த நிலையில் இருந்தே இந்த ஆயிரத்து 600 கிலோ மஞ்சளும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மறைத்து வைத்திருந்த மஞ்சளை இடம் மாற்றும் நோக்கில் அதனை வேறு இடம் எடுத்துச் செல்வதற்கு தயாராக விருந்த ஒரு பார ஊர்தி மடக்கப்பட்டது. அதனை ஏற்றி இறக்கத் தயாராக இருந்த தொழிலாளர்கள் உட்படப் 16 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 16 சந்தேக நபர்களும், மஞ்சள், பார ஊர்தி போன்ற சான்றுபொருள் சகிதம் சட்ட நடவடிக்கைக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# குச்சவெளியில் 140 ஏக்கர் அரச காணிகளை பௌத்த விகாரைகளுக்கு வழங்குகிறது அரசு

## வர்த்தமானியில் விவரம் அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

திருகோணமலை மாவட்டத்தில் சமய வழிபாடு என்னும் பெயரில் 7 இடங்களில் 140 ஏக்கர் காணி பௌத்த விகாரைக்கு வழங்குவதற்கு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழேயே இந்த 7 இடங்களும் இனங்காட்டப்பட்டுள்ளன. அவை அனைத்தும் பௌத்த துறவிகளினால் மத வழிபாட்டிற்காக கோரப்பட்டுள்ளமையினால் 30 ஆண்டுகால குத்தகை அடிப்படையில் வழங்க காணி ஆணையாளர் தீர்மானித்து அந்தக் காணி தொடர்பில் ஏதும் பிணக்கு இருப்பின் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு பௌத்த துறவிகளின் பெயரில் வழங்கப்படவுள்ளதாக குறித்துக் காட்டப்பட்டுள்ள 7 இடங்களும் 57 ஹெக்டேயர் – அதாவது 140 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும், அவற்றின் அமைவிட விவரம் தாங்கி வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பயணிகள் படகு சேவை நெடுந்தீவிற்கு நிறுத்தம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.04

கொரோனா அச்சம் காரணமாக மறு அறிவித்தல் வரையில் நெடுந்தீவிற்கான பயணிகள் படகு சேவை இடம்பெற மாட்டாது எனபிரதேசசெயலாளர்சத்தியசோதிதெரிவித்தார்.

நெடுந்தீவின் கொரோனா நிலைமை தொடர்பில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற முன்னாயத்தக் கூட்டத்தில் அனைவரின் ஒப்புதலுடன் மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் தீவில் வாழும் மக்களிற்கான பொருள்களின் படகு சேவை இடம் பெறும் அதே நேரம் பயணிகள் சேவை இடம் பெற மாட்டாது. மறு அறிவித்தல்வரையில் இது நடைமுறையில் இருக்கும். இருப்பினும் இந்தத் தடை எதிர்வரும் 14ம் திகதி வரையில் நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடு தொடர்பில் நிலைமைக்கேற்ப சகல திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மத தலைவர்களின் பங்குபற்றுதலுடன் கூடிய கலந்துரையாடலில் முடிவு எட்டப்படும். – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கில்கிட் – பல்டிஸ்தான் பிராந்தியம் மீது பாகிஸ்தானுக்கு அருகதை கிடையாது!

**இந்தியா ஆணித்தரம்**



கில்கிட் - பல்டிஸ்தான் பிராந்தியத்தின் மீது பாகிஸ்தானுக்கு எந்த அதிகாரமும் இல்லை என மத்திய வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள கில்கிட் பகுதிக்குச் சென்றபோது கில்கிட் – பல்டிஸ்தான் பிராந்தியத்துக்கு தற்காலிகமாக மாகாண அந்தஸ்து வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இந்த நிலையில், இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்துள்ள மத்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீஷிவஸ்தவா, கில்கிட் – பல்டிஸ்தான் உட்பட காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்கள், இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதிகள் என்றும், கடந்த 1947 ஆம் ஆண்டு, இந்தியாவுடன் காஷ்மீர் சட்டரீதியாக இணைந்த போதே உறுதி செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே, பாகிஸ்தான் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ள கில்கிட் – பல்டிஸ்தான் மீது பாகிஸ்தானுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் தனது சட்டவிரோத ஆக்கிரமிப்பையும் அங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களையும் மறைக்க பாகிஸ்தான் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

எனவே இதை நிராகரிப்பதாக தெரிவித்துள்ள அவர், அப்பகுதிகளில் மாற்றம் செய்வதற்கு பதிலாக, அங்கிருந்து பாகிஸ்தான் உடனடியாக வெளியேற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# வரலாறு காணாத வெப்பநிலை டெல்லியில் குறைவடைந்தது!

டெல்லியில் நவம்பர் மாதத்தின் தொடக்கத்தில்வரலாறுகாணாத அளவுக்கு வெப்பநிலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

டெல்லியில் தற்போது குளிர்காலம் தொடங்கி உள்ளது. பொதுவாக ஒக்ரோபர் மாதத்தில் 19 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் குறைந்த வெப்பநிலை இருக்கும்.

ஆனால்இந்த ஆண்டு ஒக்டோபர் மாத கடைசியில் 12.5 டிகிரியாக வெப்பநிலை பதிவானது. இது கடந்த 26 ஆண்டுகளில் ஒக்டோபர் மாதத்தில் பதிவான குறைவானவெப்பநிலை யாகும்.

இதைப்போல நவம்பர் மாதத்தின் தொடக்கத்திலும் இந்த ஆண்டு இதற்கு முன்பு இல்லாத அளவுக்கு வெப்பநிலை குறைந்துள்ளது. நேற்று அதிகாலை நிலைவரப்படி 10.8 டிகிரி செல்சியசாக வெப்பநிலை பதிவாகியுள்ளது.

வெப்பநிலை இப்படி வழக்கத்தைவிடக் குறைவாக இருப்பதற்கு மேக மூட்டம் இல்லாததே காரணம் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா குணமடைவு இந்தியாவில் அதிகரிப்பு

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் குணமடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அந்தவகையில் இதுவரை 76 லட்சத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

இது அமெரிக்காவில் குணமடைந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். அத்துடன் 5 லட்சத்து 42 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை நேற்று ஒரேநாளில் 37 ஆயிரத்து 592 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த சில நாள்களில் பதிவாகிய தொற்றாளர்களின் எண்ணிக்கையை விட குறைவாகும். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 82 லட்சத்து 66 ஆயிரத்தை கடந்துள்ளது.

மேலும் 497 உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 23 ஆயிரத்தை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய – சீனத் தலைவர்கள் மூன்றுமுறை சந்திக்க வாய்ப்பு!



நடப்பு மாதத்தில் சீன ஜனாதிபதி ஷி-ஜின் பிங்கை பிரதமர் நரேந்திரமோடிமூன்றுவெவ்வேறு கூட்டங்களில் சந்திக்கவுள்ளார்.

எல்லைப் பிரச்சினையை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், சங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 10 ஆம் திகதியும், பிரிக்ஸ் மாநாடு 17 ஆம் திகதியும், ஜி - 20 மாநாடு 21 மற்றும் 22 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது.

இதில் முதல் இரு மாநாடுகளை ரஷ்யாவும், மூன்றாவது மாநாட்டை சவுதி அரேபியாவும் நடத்துகின்றன. இந்த மாநாடுகளில் இந்தியப் பிரதமரும் சீன ஜனாதிபதியும் பங்கேற்கின்றார்கள்.

எனினும், காணொலி தொடர்பாடல் மூலம் நடைபெறும் இந்த மாநாடுகளின் போது இரு நாட்டு தலைவர்களும் பேச்சு நடத்த வாய்ப்பில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# காஷ்மீரின் அமைதியை சீர்குலைக்க பாக். முயற்சி

ஜம்மு மற்றும் காஷ்மீரில் மக்களை கொல்வதற்காக பாகிஸ்தான் ஆதரவு ஹிஜ்புல் பயங்கரவாதிகளுக்கு ஓய்வில்லா பணி வழங்கப்பட்டுள்ளதாகத் தவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவின் காஷ்மீரை சுற்றிய எல்லை பகுதிகளில் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக் குதல் நடத்தி வருகின்றனர். அத்துடன்பாகிஸ்தான்ஆதரவுபயங்கரவாத இயக்கங்களின் ஊடுருவல் காரர்களை எதிர்த்து போரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பாகிஸ்தானில் ஐ.எஸ். ஐ. உளவு அமைப்பு மற்றும் பாகிஸ்தான் இராணுவம் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஹிஜ்புல் பயங்கரவாதிகள் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் ஓய்வின்றி செயற்பட பணி வழங்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர ஜம்மு மற்றும் காஷ்மீரில் வாழும் உள்ளூர் மக்களை இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. காஷ்மீரில் அமைதியை முடங்கவும், பொலிஸார் மற்றும் அரசியல் வாதிகளை படுகொலை செய்யும் பணியை ஹிஜ்புல் பயங்கரவாதிகள் மேற்கொள் ளவும் உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால்பாகிஸ்தான்தரப்பில் இருந்து மும்முனை தாக்குதலை நேரடியாக எதிர்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்திய பாதுகாப்பு படையினருக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல் கூட்டணி தொடர்பாக கமல்ஹாசன் முக்கிய அறிவிப்பு!

எதிர்வரும் தமிழக சட்டசபை தேர்தலில் மக்களுடன் தான் கூட்டணி என்று மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் ஹாசன் அறிவித்துள்ளார்.

சென்னையில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் மாவட்ட செயலாளர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நேற்று (திங்கட் கிழமை) நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய கமல் ஹாசன் –



வருகிற சட்டசபை தேர்தலில் மக்கள் நீதிமய்யம்கட்சிமக்களுடன்தான்கூட்டணி என்று கூறினார். கூட்டணி என்பது என் வேலை, வெற்றிக்கு எல்லோரும் உழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வுடன் கமல்ஹாசன் கூட்டணி வைக்கக் கூடும் என தகவல்கள் வெளியான நிலையில் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கல்யாணமாலை**

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி – 1981.08.06 | பிறந்த திகதி – 1990.01.29 |
| மதம் – இந்து V | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – சித்திரை 4 | நட்சத்திரம் – சதயம் |
| பாவம் – 41 1/4 | பாவம் – 49 3/4 |
| கல்வி – U.K பட்டதாரி | கல்வி – M.B.B.S |
| தொழில் – U.K PR | தொழில் – Doctor |
| எதிர்பார்ப்பு– படித்த அழகான பெண். | எதிர்பார்ப்பு – கொழும்பில் வேலை பார்க்கும் Doctor or Engineer மணமகன் தேவை. |


Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்கள் தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# மலபார் கடற்படை கூட்டு பயிற்சி இன்று ஆரம்பம்!



இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கடற்படைகள் இணைந்து மேற்கொள்ளும் மலபார் கடற்படை கூட்டுப் பயிற்சி இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகியுள்ளது.

நான்கு நாள்கள் நடைபெறும் பயிற்சியின் முதல் கட்டம் விசாகப் பட்டினத்தில் ஆரம்பமாகி வங்கக் கடல் கடற்கரைப் பகுதியில் நடைபெறுகிறது.

நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்கி அழிப்பது, வான் வழியில் நடத்தப்படும் தாக்குதல்களைக் கப்பலில் இருந்து எதிர்கொள்வது உள்ளிட்ட நவீன பயிற்சிகள் இதன்போது மேற்கொள்ளப்படவுள்ளன.

சீனாவுக்கு எதிராக ஒற்றைக் கருத்துக்களை கொண்ட க்வாட் அமைப்பைச் சேர்ந்த நான்கு நாடுகளும் இந்தக் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இறுதிநாள் வாக்கெடுப்பு இன்று!




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் இறுதி நாள் வாக்குப்பதிவுகள் இன்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெறுகின்றன.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஏற்கனவே 9.5 கோடி பேர் வாக்களித்துள்ள நிலையில், இறுதி நாள் வாக்குப் பதிவுகள் இன்று இடம்பெறவுள்ளன.

இம்முறை தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

உலகளவில் கொரோனா பாதித்த நாடுகளின் வரிசையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவில் தேர்தல் திகதிக்கு முன்பே வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியுள்ளது.

அதன்படி ஒவ்வொரு தேர்தலின் போதும் கோடிக் கணக்கான மக்கள் தேர்தல் நாளுக்கு முன்பே வாக்களித்து விடுகின்றமை வழக்கம்.

கொரோனா பரவல் மற்றும் நீண்ட நேரம் வரிசையில் நிற்கின்றமையைத் தவிர்க்கும் பொருட்டு, தேர்தலுக்கு முன்னதாகவே அஞ்சல் மூலமாகவும் வாக்குச்சாவடிக்கு சென்றும் பொதுமக்கள் வாக்களித்து வந்தனர்.

அந்த வகையில், 9 கோடியே 50 இலட்சத்து 27 ஆயிரத்து 832 அமெரிக்கர்கள் தேர்தலுக்கு முன்பாகவே வாக்களித்துள்ளனர்.

இவற்றில் நேரில் சென்று வாக்களித்தவர்கள் எண்ணிக்கை 3 கோடியே 45 லட்சத்து 76 ஆயிரத்து 166 ஆகவும் இணையம் வழியே வாக்களித்தவர்கள் எண்ணிக்கை 6 கோடியே 4 லட்சத்து 51 ஆயிரத்து 666 ஆகவும் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவில் மக்கள் நேரில் சென்று வாக்களித்த எண்ணிக்கையைவிட இணையம் வழியே வாக்களித்தவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பல்கலைக்கழகம் ஒன்றின் மீது காபூலில் தீவிரவாதிகள் தாக்கு!

### 19 பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுலில் அமைந்துள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் தீவிரவாதிகள் இன்று (திங்கட்கிழமை) நடத்திய தாக்குதலில் குறைந்தது 19 பேர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் மிகப்பெரிய பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தீவிரவாதத் தாக்குதலை அடுத்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலான மோதல் ஒரு மணித்தியாலத்துக்கும் மேலாக நீடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 3 தீவிரவாதிகள் தொடர்புபட்டிருந்தனர் எனவும் அவர்களில் ஒருவர் குண்டு வெடிப்பில் உயிரிழந்துள்ளார் எனவும், ஏனைய இருவரும் பாதுகாப்புத் தரப்பினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர் எனவும் ஆப்கான் உள்துறை அமைச்சின் பேச்சாளர் தாரிக் அரியன் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தீவிரவாதத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் அநேகர் பல்கலைக்கழக மாணவர்கள் என காபூல் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும் இன்றைய தாக்குதலை தாங்கள் நடத்த



வில்லை என தலீபான் அமைப்பு தெரிவித்துள்ளது. எனவே இது ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புபட்ட தீவிர பயங்கரவாத குழுவொன்று செய்திருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

## துருக்கியில் நிலநடுக்கம் சாவு 100 ஆக அதிகரிப்பு!

துருக்கியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, கிரேக்க தீவான சமோஸின் வடகிழக்கில் ஏஜியன் கடலை மையமாகக் கொண்டு உருவான இந்த நிலநடுக்கத்தில், துருக்கியின் கடற்கரை நகரான இஸ்மிர் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 7.1 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கத்தால், அங்கு பல்வேறு கட்டடங்கள் தரைமட்டமாகின.

கட்டட இடிபாடுகளுக்கிடையே சிக்கியுள்ளோரை மீட்கும் பணியில் அந்நாட்டு மீட்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை அங்கு 106 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கத்துக்குப் பிறகு ஏஜியன் கடல்பகுதியில் உள்ள சமோஸ் தீவில் சிறிய அளவிலான சுனாமியும் உருவானது.

இந்த நிலநடுக்கத்தில் சுமார் 1,000 பேர் காயமடைந்தனர். இது சமோஸில் இரண்டு இளைஞர்களைக் கொன்றது மற்றும் தீவில் குறைந்தது 19 பேரைக் காயப்படுத்தியது.

துருக்கியின் பேரழிவு மற்றும் அவசர ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, காயமடைந்த 774 இற்கும் மேற்பட்டவர்கள் இதுவரை வைத்தியசாலைகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இஸ்மிரில் தற்காலிக தங்குமிடம் வழங்க 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட கூடாரங்களும் 13 ஆயிரம் படுக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன.



## கோனி புயலின் தாக்கம் குறைவதற்குள் பிலிப்பைன்ஸை மற்றொரு புயல் தாக்கும்!

பிலிப்பைன்ஸில் பேரழிவை ஏற்படுத்திய கோனி புயலின் தாக்கம் குறையும் முன்னரே மற்றொரு புயல் நெருங்கி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அந்நாட்டு ஜனாதிபதி ரொட்ரிக்கோ தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டின் உலகின் மிகவும் சக்திவாய்ந்த புயலாகக் கருதப்படும் கோனி புயல் தாக்கத்தால் மக்கள் மீண்டெழ முடியாத நிலையில் அட்சானி என்ற மற்றொரு புயல் பிலிப்பைன்ஸை நெருங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் பசுபிக் கடலில் மையம் கொண்டிருக்கும் இந்தப் புயல், இந்த வார இறுதியில் கரையைக் கடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் லூசன் தீவு மாகாணத்தின் பிகோல் பிராந்தியத்தில் உள்ள கேடான்டுவானஸ் மற்றும் அல்பேவில் கோனி சூறாவளி தாக்கியது.

இந்த சூறாவளியால் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளமையோடு, 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும் சூறாவளியின் தாக்கத்தால் பல்வேறு இடங்களில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அல்பே மாகாணத்தில் உள்ள மயோன் எரிமலையில் பாறைகள் உருண்டு விழுந்ததில் 300 இற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 3 லட்சத்து 90 ஆயிரம் பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 3 லட்சத்து 45 ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் பிலிப்பைன்ஸை தாக்கிய மொலேவ் சூறாவளியால் 23 பேர் உயிர்ழந்தமையோடு, 39 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதான நகரங்களில் இருந்து குயின்லாந்துக்கு நுழையத் தடை!

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட குயின்லாந்து எல்லைப் பகுதிகளுக்கான தடை நீடிக்கப்படும் என குயின்லாந்து பிரதமர் அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மாகாணமான குயின்லாந்தில் நடைபெற்ற தேர்தலில் மூன்றாவது தடவையாக வெற்றிபெற்ற அவர் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அதனடிப்படையில் ஆஸ்திரேலியாவின் பிரதான நகரங்களான சிட்னி, விக்டோரியா மற்றும் மெல்போர்ன் உள்ளிட்ட சில நகரங்களில் இருந்து குயின்லாந்து வருவதற்கான தடை தொடர்ந்து நீடிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர், இந்தத் தடை நடவடிக்கையானது இம்மாத இறுதியில் மீளப் புதுப்பிக்கப்படுமென தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த உள்நாட்டு எல்லைப் பகுதிகளுக்கிடையிலான தடைகளை மீளப்பெறுமாறு ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், குறித்த தடை குயின்லாந்தில் தொடர்ந்தும் நீடிக்கப்படுகிறது.

இந்நிலையில், அந்த நகர்ப்பகுதிகளுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடை, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் மற்றும் குயின்லாந்து பிரதமர் ஆகியோருக்கிடையில் முறுகலை ஏற்படுத்தியுள்ளது.

## முன்னணி தொற்றுநோய் வைத்தியரை பதவி நீக்குவதற்கு தயாராகிறார் ட்ரம்ப்!

அமெரிக்காவின் முன்னணி தொற்றுநோயியல் நிபுணரான அன்டனி பௌஸி தேர்தலுக்கு பின்னர் பதவி நீக்கப்படும் வாய்ப்புகள் காணப்படுகின்றன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு பிரசாரத்தில் ஈடுபட்ட அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பிரசாரத்தின் போது கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான ஊடகங்களின் செய்திகளை டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்துப் பேசினார்.

இதன்போது கூடியிருந்தவர்கள் பௌஸியை பதவி விலக்குமாறு ஆரவாரம் செய்தனர்.

இதற்கு பதிலளித்த ட்ரம்ப், நான் இந்த அறிவுரையை வரவேற்கிறேன். தேர்தல் முடிவடைந்த பின்னர் சற்றே பொறுத்திருங்கள் எனத் தெரிவித்தார்.

ஏற்கனவே கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமெரிக்க ஜனாதிபதி மீறி நடக்கிறார் என விமர்சனங்கள் நீடிக்கும் நிலையில், புளோரிடாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குறித்த பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பான்மையானவர்கள் முகக்கவசங்களை அணிந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# கிழக்கிலும் கொரோனா கோரத் தாண்டவம்

- வி.ரி.சகாதேவராஜா

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தீநுண்மியின் தாக்கம் கடந்த மார்ச் 13ஆம் திகதியுடன் ஆரம்பித்தது. அலைஅலையாகத் தாக்கத் தொடங்கியுள்ள கொரோனாவை அரசாங்கம் மிகச்சாதுரியமாக கட்டம் கட்டமாக கட்டுப்படுத்தி வருகிறது. உயர்தரப் பரீட்சை நிறைவுற்றதும் துரித கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

இறுதியாக ஒக்ரோபர் 3ஆம் திகதி தொடங்கிய மூன்றாவது அலையின் தாக்கம் மேற்கிற்கு அப்பால் கிழக்கையும் முதற் தடவையாக கிலி கொள்ள வைத்திருக்கிறது. முதலாவது அலையில் மட்டுநகரைச் சேர்ந்த ஒருவர் தொற்றுக்குள்ளாகி பின்பு குணமாகி அவர் லண்டன் சென்றுவிட்டார் என்பது தெரிந்த விடயமே.

ஆனால் இந்த 3 ஆவது அலை கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களையும் வெகுவாகப் பாதிக்கத் தொடங்கியுள்ளது. அதுவரை நிம்மதியாக இருந்து வந்த கிழக்கு மக்கள் பய பீதியுடன் நாள்களைக் கடத்துவதைக் காண முடிகிறது. எனினும் பலர் இன்னமும் பொடுபோக்குத்தனமாக நடமாடுவதையும் இவ்வண் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும். தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் வந்தாலே தெரியும் என்பார்கள். எனவே கொரோனா தனது படலையைத் தட்டும்வரை பார்த்திருப்பதை விட வருமுன் காக்க சுகாதாரத்துறையினருடன் ஒத்துழைக்கவேண்டியது அவசியமாகும்.

### இன்றைய கிழக்கின் கொரோனா நிலைவரம்

கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றுகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்



துச் செல்கிறது. கிழக்கில் இதுவரை 77பேர் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இவர்களில் மினுவாங்கொட கொத்தணி மூலமாக 04பேரும் பேலியகொட கொத்தணி மூலமாக 73பேரும் தொற்றுக்கு இலக்காகியிருந்தனர்.

கிழக்கு மாகாண கொவிட் தகவல் மையம் இத்தகவலை தெரிவிக்கிறது.

கிழக்கில் வாழைச்சேனை கோறளைப்பற்று மத்திபிரிவில் அதிகூடிய தொற்றுக்கள் 35 இனங்காணப்பட்டிருந்தன. அடுத்தபடியாக மூதூரில் 9பேரும், பொத்துவிலில் 7பேரும் இதுவரை தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இறுதியாக மூதூரில் மூவரும் கல்முனைப் பிராந்தியத்தில் நால்வரும் திருமலையில் ஒருவரும் புதிதாக இனங்காணப்பட்டிருந்தனர்.

அம்பாறை மகாஓயா தெஹியத்தகண்டிய மற்றும் கந்தளாய்ப் பிரிவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர் நால்வரும் மினுவாங்கொட கொத்தணி மூலம் தொற்றுக்குள்ளானவர்கள். ஏனைய 73பேரும் பேலியகொட மீன்சந்தைக் கொத்தணியில் பாதிக்கப்பட்டவர்களாவர்.

கல்முனையில் மேலும் 4 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக நேற்றுமுன்தினம் அடையாளப்படுத்தப்பட்டார்கள். மருதமுனையில் இருந்து ஒருவரும் அக்கரைப்பற்றில் இருந்து ஒரு வரும் இறக்காமம் பிரதேசத்தில் இருந்து இருவருமாக மொத்தமாக 4 பேர் அடையாளப்படுத்தப்பட்டார்கள். கல்முனைப் பிராந்தியத்தில் மொத்தமாக 17 பேர் கொரோனா நோயாளிகளாக சிகிச்சை பெற்று கொண்டிருக்கிறார்கள் என கல்முனைப்பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர் குண. சுகுணன் தெரிவிக்கிறார்.

மேலும் இற்றைப்படுத்தப்பட்ட(3.11.2020) கிழக்கு கொவிட் தகவல் மைய தரவுகளின் படி –

கிழக்கிலுள்ள ஐந்து கொரோனா சிகிச்சை நிலையங்களில் தற்போது 425 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இன்று (03.11.2020) வரை 570பேர் மேற்படி 5 வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 143பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இருவர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி சிகிச்சை நிலையத்தில் நேற்று வரை 225பேர் அனுமதிக்கப்பட்டு 131பேர் குணமடைந்து வெளியேறியமையால் தற்போது 92 பேர் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருகின்றனர். இருவர் இடமாற்றப்பட்டிருந்தனர்.

மேலும் ஈச்சிலம்பற்று சிகிச்சை நிலையத்தில் 92 பேரும், கரடியனாறு சிகிச்சை நிலையத்தில் 103 பேரும், பதியத்தலாவ சிகிச்சை நிலையத்தில் 69பேரும், பாலமுனை சிகிச்சை நிலையத்தில் 81 பேரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.



இதுவரை கிழக்கில் சந்தேகத்திற்கிடமான 3,462 பேரில் 1,316 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதேவேளை கிழக்கிலுள்ள 12 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 3,052 பேர் அனுமதிக்கப்பட்டு 3,764 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 108 பேருக்குச் சாதகமான – அதாவது தொற்றுறுதி – செய்யப்பட்டிருந்தது. 125பேர் குணமாகிவீடு திரும்பியுள்ளனர். எனவே தற்போது மேற்படி 12 நிலையங்களிலும் 2,819 பேர் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும தொற்றாளர்கள் அதிகரித்துவருகின்ற இன்றைய நிலையில் மேலும் கொரோன சிகிச்சை வைத்தியசாலைகள் தொடக்கம் சகல வசதிகளையும் ஏற்படுத்தவேண்டிய அவசியம் எழுந்துள்ளது. மறுபுறம் பொதுமக்கள் இன்னும் சரியான சுய பாதுகாப்பில் ஈடுபட்டவர்களாகத் தெரியவில்லையென சுகாதாரத்துறை கவலையடைகின்றது.

கொழும்பலிருந்து வந்தவர்கள் யாரிடமும் சொல்லாமல் அநாயசமாகச் சுற்றித் திரிகின்றனர் என மருத்துவர்கள் சசுட்டிக் காட்டத் தவறவில்லை. எனவே மக்கள் தாமாக உணர்ந்து கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்காவிடின் கொரோனா மேலும் தனது கோரமுகத்தை சீற்றத்துடன் வெளிக்காட்டலாம்.



# ஊரடங்கு தொடர்பில் போலி செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்ற வேண்டாம்!



## இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு, நவ. 03

ஊரடங்கு உத்தரவு தொடர்பில் போலியான செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்ற வேண்டாமென சமூக ஊடகங்களுக்கு கொவிட் - 19 ஐத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவு தொடர்பாக சமூக ஊடகங்கள் மற்றும் சில வலைத் தளங்களில் பரப்பப்பட்ட போலி செய்திகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சவேந்திர சில்வா மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நாட்டை முழுமையாக முடக்குவதற்கு இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

மேலும் போலி செய்திகளை வெளியிட்டு, மக்களை ஏமாற்ற வேண்டாம். ஊரடங்கு உத்தரவு இல்லாத பகுதிகளில் வசிக்கும் மக்கள் முடிந்தவரை வீட்டில் தங்க வேண்டும். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# காத்தான்குடி வர்த்தக நிலையம் தீயினால் எரிந்து நாசமாகியுள்ளது



மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியில் பலசரக்கு வர்த்தக நிலையமொன்றில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை ஏற்பட்ட திடீர் தீவிபத்தால் கடை உரிமையாளர் படுகாயமடைந்தமையுடன் கடையின் பல கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது அந்தத் தீயை தீயணைப்புப் படையினர் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தனர்.

குறித்த கடை வழமைபோல திறந்திருந்து வியாபாரநடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது காலை 10 மணியளவில் திடீரென தீப்பற்றியது. இதனையடுத்து அப்பகுதியில் இருந்த பொதுமக்கள் பொலிஸார் உடனடியாக தண்ணீரை ஊற்றி அணைக்க முயற்சித்தமையுடன் தீயினுள் அகப்பட்ட கடை உரிமையாளர் தீயால் படுகாயமடைந்த நிலையில் மீட்டனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாநகர சபை தீயணைக்கும் படையினரும் சுமார் இரு மணி நேர போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டினுள் கெண்டுவந்தனர்.

இதேவேளை அந்த வர்தக நிலையம் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையமாகவும் எரிவாயு முகவர் நிலையமாகவும் உள்ளது. இதனால் அருகிலுள்ள கட்டடத்திலுள்ளவர்கள் அச்சம் காரணமாக கட்டடத்தை விட்டு சிலமணிநேரம் வெளியேறினர்.

# முல்லை கருவாட்டு தொழிற்சாலையை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சி

முல்லைத்தீவு, நவ.03

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத்தின் கருவாட்டு தொழிற்சாலையின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கொரோனா காரணமாக கருவாடு உற்பத்தி செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், நேற்று (திங்கட்கிழமை) சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அதன்படி, தொழிற்சாலை கொரோனாத் தொற்று நீக்கப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்த தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுகின்ற இயந்திரத்தின் ஊடாக ஐந்து மணித்தியாலங்களில் சுமார் 400 கிலோ கிராம் கருவாடு உற்பத்தி செய்ய முடியும்.

இந்த நிலையில் உற்பத்தி செய்யப்படுகின்றகருவாடுகளைஇலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஊடாகக் கொள்வனவு செய்து சதோச விற்பனை நிலையங்கள் ஊடாக சந்தைப்படுத்துவதற்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# யாழில் 51 பேருக்கு பி.சி.ஆர். சோதனை எவருக்கும் தொற்று இல்லை என முடிவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட 51 பி.சி.ஆர். பரிசோதனைகளில் எவருக்குமே கொரோனா வைரஸ் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வந்த யாழ்ப்பாணம், வேலணை மற்றும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச்சேர்ந்த 6 பேருக்கு கடந்த சனிக்கிழமை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர்களுடன் பஸ்ஸில் பயணித்த 21 பேருக்கு நேற்றுமுன்தினம் மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இவற்றின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளிவந்தன. அதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் 6 சந்தைகளில் இருந்து பெறப்பட்ட 30 பேரின் மாதிரிகளின் பெறுபேறுகளும் நேற்றிரவு கிடைக்கப்பெற்றன. இவற்றில் எவலுக்குமே தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது.

# முஸ்லிம் உடல்கள் அடக்கம் ஆராய்ந்து வருகின்றது அரசு

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதிக்க வேண்டும் என பல தரப்பினர் விடுத்துள்ள வேண்டுகோள்களை அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (செவ்வாய்க்கிழமை) கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் உடல்களை தகனம் செய்யவேண்டாம் என இந்த வருட ஆரம்பத்தில் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இது தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வைரஸின் இயல்பு தொடர்பாகத் தெரியாததாலும் கொரோனா வைரஸ் பற்றி நிச்சயமற்ற தன்மை காரணமாகவும் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது ஆறுமாத காலங்கள் முடிவடைந்துள்ள நிலையில், இது தொடர்பில் மீள ஆராயப்படுவதாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் உயிரிழந்த அனைவரினதும் உடல்களை தகனம் செய்வது தொடர்பான முடிவை அரசாங்கம் தற்போது மறுபரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளது என நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

# யானைத் தடுப்பு வேலித் தூண்களுக்கு கட்டைகளிற்கு பதில் தண்டவாளங்கள்

## அமைச்சரவையில் அங்கீகாரம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.03

இலங்கையில் யானைத் தடுப்பு வேலிகளின் தூண்களுக்கு கட்டைகளிற்கு பதிலாக தண்டவாளங்களைப் பயன்படுத்த அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று இடம்பெற்ற சமயமே இந்த விடயத்திற்கும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 19 மாவட்டங்களிலுள்ள 133 பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போது யானை - மனித பிரச்சினை காணப்படுகின்றது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக வன ஜீவ ராசிகள பாதுகாப்புத் திணைக்களம் பின்பற்றுகின்ற பல்வேறு மூலோபாயங்களில் பாதுகாப்பு வேலி அமைத்தல், மின்வேலி அமைத்தல் என்பன முக்கியமானவையாக அமைகின்றன.

இதுவரை 4500 கிலோ மீற்றர்களுக்கு மேற்படி 133 பிரதேச செயலகப் பிரிவுகளில் தடுப்புவேலி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 1500 கிலோ மீற்றர்கள் மின்வேலிகளும், பாதுகாப்பு வேலியுடன் கூடிய யானைப் பாதுகாவல் மத்திய நிலையமும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வேலிகளை அமைப்பதற்காக மரத்தூண்கள் பயன்படுத்தப்பட்டாலும், காட்டு யானைகள் அவற்றைப் பிரட்டி விடுகின்றன. அதற்காகக் கொங்கிரீட் தூண்கள் அமைப்பதிலும்சிரமங்கள்பலகாணப்படுகின்றன.

இதன் காரணத்தால், மாற்று வழிமுறையாக, பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட தண்டவாளங்களைப் பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக ரயில்வேத் திணைக்களத்தின் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட தண்டவாளங்களை வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கான யோசனையை வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சர் ஆகியோர் அமைச்சரவையில் சமர்ப்பித்தனர்.

இந்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2020 இல் வெளியிடப்பெற்றது.